கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், கடலூர்

O.S.No.148/2011 தேதி: 17.10.2023

வாதித் தரப்பு சாட்சி- 1 (மகேஷ்வரி, க/பெ.சிவா )

சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டார்.

பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி

1. உரிமையியல் நீதிமன்றத்தில் அசல் வழக்கு எண். 268/1961 ல் பிரபித்த தீர்ப்பாணை எதிர்த்து கடலூர் சார்பு நீதிமன்றத்தில் மேல்முறையீட்டு வழக்கு எண் 337/1963 தாக்கல் செய்து 18.11.1964 ல் விசாரணைக்கு பின் தள்ளுபடி செய்யப்பட்டது என்றால் அது பற்றிய விபரம் எனக்கு தெரியாது. அந்த மேல்முறையீட்டு தீர்ப்பாணைக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட 2 ம் மேல்முறையீட்டு SANo.1040/1965 26.08.1969 ல் விசாரணைக்கு பின் தள்ளுபடி செய்யப்பட்டது என்றால் அது பற்றிய விபரம் எனக்கு தெரியாது.
2. இந்த வழக்கு தாக்கல் செய்த பிறகாவது பிரதிவாதி தாக்கல் செய்த எதிர் வழக்குரையை படித்து மேற்சொன்ன சங்கதிகள் தெரிந்துக்கொண்டேனா என்றால் இல்லை. பொறம்போக்கு மனை என்பதால் கேட்டு தெரிந்துக்கொள்ளவில்லை. இனாம் ஒழிப்பு தீர்பாயத்திலும், நீதிமன்ற நடவடிக்கைகள் அனைத்திலும் தாவா சொத்து மற்றும் அதை சார்ந்த சொத்து தனிப்பட்ட நபருக்கு பாத்தியம் இல்லை, பிரதிவாதி தர்மசத்திரத்திற்கும் அது சார்ந்த கோவிலுக்கும் பாத்தியமானது என்று ஏற்கனவே தீர்ப்பாணை பிறப்பிக்க பட்டுவிட்டது என்றால் அது பற்றிய விபரம் எனக்கு தெரியாது.
3. தாவா சொத்து மற்றும் அதை சார்ந்த சொத்தில் ஆக்கிரமிப்புகாரர்களை அகற்றுவதற்கு விழுப்புரம் HR & CE இணை ஆணையரிடம் மனு கொடுத்து அனுமதிக்கப்பட்டுவிட்டது என்றால் அது பற்றிய விபரம் எனக்கு தெரியாது. அந்த உத்தரவு எனக்கு சார்பு செய்யப்பட்டதா என்றால் இல்லை. அந்த உத்தரவை ரத்து செய்ய நான் நடவடிக்கை ஏதேனும் எடுத்தேனா என்றால் அந்த உத்தரவை பற்றி எனக்கு தெரியாது. எனக்கு அறிவிப்பு அனப்பியும் நான் ஆஜராகததால் HR & CE இணை ஆணையர் தாவா சொத்தில் இருந்து என்னை காலி செய்ய 19.04.2011 ல் உத்தரவிட்டார் என்றால் எனக்கு அவ்வாறு எந்த உத்தரவும் சார்பு செய்யப்படவில்லை.
4. வழக்கு சொத்தில் 80 ஆண்டுகாளமாக மொட்டையன் தான் அனுபவித்து வந்தார் என்பதற்கு ஆவணம் ஏதேனும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்தேனே என்றால் தாக்கல் செய்துள்ளேன். மொட்டையன் மகன் தான் நமச்சிவாயம் என்பதற்கும் அவர் தாவா சொத்தில் இருந்து வந்ததற்கு என்பதற்கு ஆவணம் ஏதேனும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்தேனே என்றால் தாக்கல் செய்துள்ளேன். 1 ம் பிரதிவாதி தாவா சொத்தில் இருந்த வீட்டை இடிக்க 12.05.2011 ல் முயற்சித்த போது நான் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேனா என்றால் இல்லை. தாவா சொத்தும் அதனை சார்ந்த சொத்தும் 1 ம் பிரதிவாதி தர்மசத்திரத்திற்கும் அது சார்ந்த கோவிலுக்கும் பாத்தியமானதும் அதில் உரிமை கோர எனக்கு எந்த முகாந்திரமும் இல்லை என்றாலும் தாவா சொத்தை நான் காலி செய்யது ஒப்படைக்க கடைமைபட்டவர் என்றாலும் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.